[1968 ஆகஸ்ட் 30

குடியாத்தம் சாக்கடை அமைப்புத் திட்டம்.

* 206 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரமன்றம் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசிடம் கடனே, மானியமோ கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் தற்போதைய நிதி பற்ருக்குறை காரணமாக, குடியாத்தத்திற்கு இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் ஒரு வடிகால் திட்டம் துவக்குவதற்கு சாத்தியமாகாது என்று அந்த நகரசபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 100-க்கு 90 சதவீதம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும், பீடித் தொழிலாளர்களும் கொண்டதும், அந்த மாவட்டத்தின் தலைநகருக்கு அடுத்த மிகப்பெரிய ஜனத்தொகை கொண்டதுமான அந்த ஊரிலே இந்தச் சாக்கடைக் கால்வாய்த் திட்டம் இல்லாத காரணத்தால் அடிக்கடி அவர்கள் வியாதியஸ்தர்களாகி அதற்குப் போதுமான அளவு சிகிச்சை பெற வசதியில்லாமல், ஆஸ்பத்திரியில் போதுமான படுக்கை வசதியில்லாமல் இருப்பது தெரியும். அதை உத்தேசித்தாவது. இப்பொழுது இல்லை என்ருலும் அடுத்த ஆண்டிலாவது உடனடியாக அதில் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தத் திட்டம் எப்பொழுதாவது, ஏதாவது ஒரு காலத்தில் நிச்சயமாக வரும். ஆனல், தற்போது நிதிப் பற்ருக்குறை காரணமாக இருக்கிறது.

திரு. டி. மார்டின் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். சற்றுச் சில நிமிஷங்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் அமைச்சரவர்கள் 1962 முதல் 1966 வரையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் குழுவில் நீதிபதிகள் இல்லை என்று சொன்ஞர்கள். இதே நேரத்தில், ஜஸ்டிஸ் சுப்பிரமணியம் அவர்களும், ஜஸ்டிஸ் ராமசாமி கவுண்டர் அவர்களும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள், அவர்கள் அந்தக் குழுவில் இருந்திருக்கிருர்கள். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு தங்களுடைய கருத்தைத் தெரிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் பதில் அளிக்கும் நேரத்தில் அது போன்ற குறிப்பு இல்லை என்றுதான் குறிப்பிட்டேன். குறிப்பைப் பரிசீலனை செய்து அப்படியிருக்குமானல் ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்விகள்

(i) தனியார் அலுவல் நாளில் பேரவையை ஒற்றிவைக்கும் நேரம்

DR. H. V. HANDE : On a point of order, Sir, I would like to know when the business of the House is likely to be wound up in the afternoon ? Will the debate be over by 1-30 p.m. or is it likely to go on till 2-00 p.m. ? Yesterday, during non-official day, the

business of the House was over by 1-28 p.m. The previous non-official day was carried on till 2·00 p.m. What is the practice ? We must know. Yesterday I wanted to speak but suddenly at 1·28 p.m. the House was adjourned. What is the procedure to be adopted ? What is the criterion by which the House is wound up on a non-official day ? I want a clarification.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றம் 1½ மணிக்கு மேலும் போகிறது என்பதைப் பற்றிக் கேட்கிறார்கள். உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அவர்களும் பேசுவது என்ற முறையைக் கடைப்பிடித்தால் இந்த மன்ற நிகழ்ச்சியை 1½ மணிக்குள் முடித்து விடலாம். ஆனால் இங்கே பேசுபவர்கள் 10 நிமிஷங்கள் என்று வரையறை செய்யப்பட்டிருந்தால் 15 நிமிஷங்கள் பேசுவதும், 20 நிமிஷங்கள் பேசுவதுமாக இருக்கிறார்கள். எனவே உறுப்பினர்கள் கட்டுப்பாட்டோடு நடந்தால் சபையின் நேரமும் கட்டுப்பாட்டுக்குள் வரும். அவ்வாறு இல்லாததால்தான் உறுப்பினர்கள் வசதி, வாய்ப்பு இவைகளைக் கருத்திற்கொண்டு பேரவையின் நேரத்தை மேலும் சிறிது நேரம் நீடிக்க வேண்டி இருக்கிறது. பொதுவாக 1½ மணிக்கு முடிய வேண்டும். ஆனால் உறுப்பினர்களின் வசதிக்காக மேலும் சில மணி நேரம் நீட்டிக்கப்படுவதால் எந்த நேரத்திலே சபை முடியும், எவ்வளவு நேரத்திலே சபை முடியும் என்று முன்கூட்டியே சொல்ல இயலாது.

Dr. H. V. HANDE : I wanted to speak yesterday and I was assured I will be given a chance. I wanted to speak yesterday on non-official resolution on anti-automation. But suddenly at 1·28 p.m., the House was adjourned. What is the procedure generally adopted in adjournment of the House ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையிலே யாரைப் பேச அழைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க தலைவருக்கு உரிமை உண்டு. அறையிலே உறுப்பினர்கள் வந்து பேசி, அங்கு நான் சொன்ன கருத்தை உறுதி மொழி என்று இங்கு வந்து கூறுவது முறையாகாது. 1½ மணிக்கு சபை முடிய வேண்டுமென்று விதியிருக்கிறது. ஆனால் நான் ஏற்கனவே சொன்னபடி உறுப்பினர்களின் வாய்ப்பைக் கருதியும், எடுத்துக்கொண்ட பொருள்பற்றியும் கருத்திற்கொண்டு பேரவையின் அனுமதியோடு இன்னும் சிறிது நேரம் அதிகமாக எடுத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே இது சம்பந்தமாக வரைமுறையான ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சட்ட மன்றம் 1½ மணிக்கு முடிய வேண்டுமென்பதுதான் விதி. மேலும் சபையின் நேரத்தை 1½ மணிக்கு மேலும் நடத்த வேண்டுமென்றால் சபையின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். சாதாரணமாக கேள்வி நேரம் என்று 1 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மேலும் கேள்வி நேரத்தை நீட்டிக்க வேண்டுமென்றால் சபையின் அனுமதி பெற்றுத்தான் நீட்டிக்க வேண்டும், அந்த முறையில்தான் நீட்டிக்கிறோம். உத்தியோகச் சார்பற்றவைகளும் இதனுடைய தொடர்ச்சியாக அடுத்த முறை வரும்போழுது தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படும்.

2. அவையுரிமைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) பொதுப்பணி அமைச்சர் ஹேமாவதி திட்டம்பற்றி டெல்லியில் நடத்திய பேச்சுவார்த்தைபற்றிய செய்தியை பத்திரிகைகளுக்கு முன்னதாக அளித்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். என். வி. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த உரிமைப் பிரச்சினையைப்பற்றி விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.